# தொண்டா யோசனையை நிராகரிக்க பௌத்த அமைப்புகள் கோரிக்கை

(கொழும்பு)
அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள யோசனையை நிராகரிக்குமாறு பல சிங்கள பௌத்தஸ்தாபனங்கள்' ஜனாதிபதியை கோரியுள்ளன. "இலங்கை தேசாபிமான

(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY'

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 24 இதழ் 329
யாழ்ப்பாணம் புதன்கிழமை 08—01—1992


## மூன்று தமிழர்கள் செங்கலடியில் கொலை

(மட்டுநகர்)
மட்டக்களப்பு செங்கலடிப் பகுதியில் மூன்று தமிழர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதையின்

(4ம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறை ராணுவ முகாம் நோக்கி புலிகள் தாக்குதல்

(கொழும்பு)
யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊர்காவற்றுறையில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரை நோக்கி விடுதலைப் புலிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு இணைந்த தன்னாட்சி உரிமை வழங்குவதே இனப் பிரச்சனை தீர்வுக்கு வழி

(புதுடில்லி)
**இலங்கையில் வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைக்கப்பட்டு தன்னாட்சி உரிமை வழங்குவதுதான் இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணக்கூடிய வழி என்று இந்தியா இலங்கையிடம் தெரிவித்துள்ளது.**

இந்திய-இலங்கை கூட்டணி குழு நடத்திய கூட்டங்களில் வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைக்கும் அரசியல் சாசனத் திருத்தத்தின் அடிப்படையில் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டுமென இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி தெரிவித்தார்.

இலங்கை இப்போது வேற திட்டங்களை முன் வைத்திருக்கிறது: ஆனால் இந்திய வெளியுறவு அமைச்சர் வெளியிட்டி

(4-ம்பக்கம் பார்க்க)

## தீவகத்தில் சிவில் நிர்வாகம் அரசு தரப்பில் முயற்சி

(கொழும்பு)
தீவுப் பகுதியில் அடுத்த ஒரு மாத காலத்துள் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி 7 தீவுப்பகுதியும் அரச அதிபருக்கு சமமான ஓர் ஆணையாளரின் கீழ் நிர்வகிக்கப்படவுள்ளது. 4 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனநாயக குழுக்களுடன் இலங்கை அரசு பேச்சு நடத்தவேண்டும்

(புதுடில்லி)
ஜனநாயக வழிக்கு திரும்ப சம்மதிக்கும் தமிழ் குழுக்களுடன் இலங்கை அரசு பேச்சு நடாத்தி இனப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வுகாணவேண்டும்."

இந்திய வெளியுறவு செயலர் திரு. ஜே. என். டிக்ஸிற் இலங்கை வெளியுறவுச் செயலர் திரு. பேர்னாட் திலகரத்ன

(4ம் பக்கம் பார்க்க)

## பண்ருட்டி, ராமதாஸ் விடுதலை

(சென்னை)
பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ராமதாஸ் அக்கட்சியின் எம். எல். ஏயான பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோர் உட்பட கட்சியின் 300 தொண்டர்களும் நேற்று மாலை சேலத்தில் விடுவிக்கப்பட்டார்கள். (ச)

## இருபெண்களின் சடலங்கள் கருகிய நிலையில் மீட்பு

(கொழும்பு)
மாறவில பகுதியில் இரு பெண்களின் சடலங்களை கருகிய நிலையில் பொலிசார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக புத்தளம் மாவட்ட எதிர்க்கட்சி எம்.பி. ஒருவரின் பஜ்ரோ ஜீப் மாறவில பொலிசாரால் கைப்பற்றப்பட்டது. ஜீப் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி கொலைக்கு எம்.பியின் மனைவியே சூத்திரதாரியென விசாரணைமூலம் தெரியவந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (சி)

## வெளியுறவு அமைச்சர்கள் புலிகள் பற்றி ஆராய்வு

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து இந்திய இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, இந்தியா உட்பட அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்தே புதுடில்லியில் இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

## மன்னார் மாவட்டத்தளபதி லெப். கேர்ணல் வேணு உட்பட நான்கு புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
மன்னாரில் தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் மன்னார் மாவட்டத் தளபதி லெப். கேர்ணல் வேணு உட்பட நான்கு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

நேற்று முன்தினம் பி. ப 2 மணி 10 நிமிடமளவில் விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்தினருக்கு வாகன மிதிவெடியை வைக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது மிதிவெடி தவறுதலாக வெடித்தது.

இவ்வெடி விபத்தில் லெப். கேர்ணல் வேணு (பிரான்ஸிஸ் ரொபேர்ட் சேவியர்-அடம்பன் ஆண்டான்குளம்) மேஜர் ஞானம் (இராமலிங்கம் சிவஞானம் புதுக்குடியிருப்பு, மணற்குளம்), மேஜர் சயந்தன் (தங்கராசா ராஜ்மோகன் உப்புக்குளம், மன்னார்), கப்டன் குட்டிமணி (அருளானந்

(4-ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியிலிருந்து பின்வாங்க மாட்டேன் தொண்டா அறிவிப்பு

(கொழும்பு)
மரணத்திற்கு அஞ்சி சமாதான முயற்சியிலிருந்து பின்வாங்கமாட்டேன். இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதே எனது நோக்கம் என அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

நான் புலிகளுக்கு உதவும் நோக்குடன் யாழ்ப்பாணம் செல்லமுயலவில்லை. நாட்டினதும், மக்களினதும் நன்மை கருதியே இம்முயற்சியில் இறங்கினேன்.

இதனை வைத்துக்கொண்டு மனக்குழப்பம் அடைந்துள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டாவின் யோசனைக்கு லிபரல் கட்சி ஆதரவு

(கொழும்பு)
அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள யோசனைகளை 'லிபரல் கட்சி' ஆதரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மேலும் பிரச்னை தீர்வுக்கு லிபரல் கட்சியும் 20 பக்கம் அடங்கிய யோசனை ஒன்றையும் முன்வைத்துள்ளது.

இதேவேளை தொண்டமா

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் கிடைக்குமிடம், எவி மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (இ-5666)

### வைத்தியம்

தீவகத்தில் இயங்கிய பாக்கியம் குழந்தைகள் வைத்திய சாலை கல்வியங்காட்டிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள இருபாலை சந்திக்கு இடமாற்றப்பட்டுள்ளது. (இ-5816)

### வரலாறு

விற்பனையாகின்றது. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வரலாறு- ஆண்டு II, வரலாறு- ஆண்டு 6. புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது. ஆக்கியோன்: ந. தர்மபாலன் (சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்.) (இ-5808)

### G. C. E. (A/L) PHYSICS

A/L பௌதிகம் அனுபவமுள்ள பட்டதாரி ஆசிரியரினால் வீடுகளிற்கு வந்து விளக்கமாகக் கற்பிக்கப்படும். தொடர்புகட்கு வசந்தம் புத்தகசாலை, 405, ஸ்ரான்லி வீதி (புகையிரத நிலையத்திற்கு வடக்காக) யாழ்ப்பாணம். நேரம்: 12-30—1.30 வரை. (இ-5803)

### அறிவுப் போட்டி

அஷ்டலக்ஷ்மி வாரத்தாள் கலண்டர் விலை ரூபா 55/- பொது அறிவுப்போட்டி பரிசு ரூபா 1000/- விடைகள் கலண்டரில் உண்டு. விபரங்களை விற்பனையாளரிடம் பெறுங்கள். (இ-5806)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## நித்திலா கல்விக்கூடம் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

அரியாலை கிழக்கு பூம்புகார் கிராமத்தில் நேற்று நித்திலா கல்விக்கூடம் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தையாவினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி சாந்தி மங்களவிளக்கேற்ற, மக்கள் முன்னணித் தலைவர் திரு மாத்தயா தமிழீழ தேசியக்கொடியேற்ற அரசியல் பொறுப்பாளர் திரு. தமிழ் மாறன் பாடசாலையை திறந்து வைத்தார்.

## வடமராட்சியில் வயிற்றோட்ட நோய்

(புலோலி)

குடத்தனை, அம்பன், நாகர்கோவில் பகுதிகளில் வயிற்றோட்ட நோய் அதிகரித்துள்ளது.

வயிற்றோட்ட நோய்க்கு இலக்கானோர் அம்பன் அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (61)

## சவர்க்கார விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் சவர்க்காரங்கள் 10 ரூபாவிற்குக் குறைந்த விலையில் எங்கும் விற்கப்பட்டுவருகிறது.

யாழ். குடாநாட்டை நோக்கி கடந்த 3-ம் திகதியிலிருந்து பல லொறிகள் சவர்க்காரங்களுடனும் உணவுப்பொருள்களுடனும் வந்து கொண்டிருப்பதால் யாழ்ப்பாணப் பகுதியில் சில தினங்களில் சவர்க்காரங்களின் விலையில் மேலும் வீழ்ச்சி ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)


## Jam போத்தல்கள் தேவை

ஜாம் [Jam] புரூடினேக்ஸ், விமா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

**Taste Line Industies (Pvt) Ltd.**
14, Seenier Lane, Jaffna,

குறிப்பு: Jam போத்தல்கள் தொடர்ச்சியாக கமிஷன் அடிப்படையில் விநியோகம் செய்யக் கூடியவர்கள் தேவை.

(ஏ 1840)

## உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் புனர் அமைப்பு

கடந்த சில மாதங்களாக இயங்காதிருக்கும் மேற்படி சங்கத்தைப் புனர் அமைப்பதற்காக 19-1-1992 ஞாயிற்றுக்கிழமை பி. ப. நாலுமணியளவில் யாழ்ப்பாணம் 67 புகையிரத நிலைய வீதியிலுள்ள பணிமனை இல்லத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்படும். சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகந்தருமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

ஜி. பி. வின்சென்ற்
காப்பாளர்

(சி 5835

## தொழிற் பயிற்சிகள்

எங்கும் இலகுவாகத் தொழில்வாய்ப்புப் பெற
குறைந்த காலத்தில் சிறந்த பயிற்சிகள்
O/L பரீட்சை எழுதிமுடித்த மாணவர்கள் குறுகிய காலத்தில்
வாழ்க்கைக்கு உபயோகமான ஒரு தொழில்கல்வி கற்க

**அரிய சந்தர்ப்பம்!**

★ **றேடியோ, T. V. வீடியோ டெக் றிப்பியறிங்**
சகல இன றேடியோ, T. V., வீடியோ டெக் தொழிற்பாடு, திருத்துதல் ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கபப்டும்.
காலம்: 4 மாதம்

★ **றீவைண்டிங்**
மின்மோட்டார், மின்விசிறி, ரான்ஸ்போமர் மற்றும் மின்சார உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல். ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 3 மாதம்

★ **எலெக்ரிக்கல் வயறிங்**
வீட்டு மின்சார வயறிங் வேலைகள், மின்சார உபகரணங்கள் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.

★ **ENGINEERING DRAWING**
(1-ம் வருட பொறியியல் பீட மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்)

★ **AIR CONDITION & REFRIGERATION ENGINEERING**
காலம்: 4 மாதம்

★ **MOTOR BICYCLE, WATER PUMB MECHANISM**
காலம்: 5 மாதம்

★ **COMPUTER PROGRAMMING (BASIC)**
காலம்: 3 மாதம்

★ **SPECIAL SPOKEN ENGLISH WITH GRAMMAR**
குறுகியகால தினசரி வகுப்புக்கள்
காலம் 2 மாதம்

சகல தொழிற்பயிற்சிகளுக்கும் செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்

வகுப்புக்கள் வாரநாட்களிலும் சனி, ஞாயிறு நாட்களிலும் நடைபெறுகின்றன.

மீண்டும் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பம்:
10 - 01 - 1992 (வார நாட்கள்) 9 - 00 A. M.
11 - 01 - 1992 (சனி, ஞாயிறு) 9 - 00 A. M.

விபரங்களுக்கு:

# JAFFNA TECHNICAL INSTITUTE

52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)

முக்கிய குறிப்பு: சகல இன றேடியோ, T. V. - வீடியோ டெக் குறித்த தவணையில் திருத்திக்கொடுக்கப்படும். மேற்படி பொருட்களுக்குரிய IC. ரான்சிஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. (எ-1836)

## VACANCY

**Trainee Production Assistant**

A growing Food Producing Industry is looking for an energetic young girl who posses a degree with Botany and Chemistry as Subjects or has Passed the G. C. E. (A/L) examination with credit passes in Botany and Chemistry and should have a good command of English The right person should be prepared to learn through hard work and dedication. The Training period is one year at the end of which promotion to the post of Production Assistant will be effected

Apply within 2 weeks
Box No: 1839,
C/O Eelanadu,
Jaffna,

(A-1839)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## ஆதன வரி அறிவித்தல்

31-01-1992-ஆம் திகதிக்கு முன்பாக 1992-ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை முழுமையாக செலுத்துவோர்களுக்கு 10 வீதமும், 1992-ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டிற்கு மட்டும் செலுத்துவோர்களுக்கு 5 வீதமும் வரிக்கழிவு வழங்குவதற்கு இச்சபை தீர்மானித்துள்ளது.

குறிப்பிடப்பட்ட திகதிக்குள் ஆதனவரிகளைச் செலுத்தத் தவறினால் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் பிந்துக் கட்டணம் மேலதிகமாக செலுத்தப்படவேண்டும்.

எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31-01-1992-ஆம் திகதி மதியம் 12 00மணிக்கு முன்பாக முழுமையாக இச்சபையின் காரியாலயத்தில் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
06-01-1992.

(எ-1842)

# ★ யோசனைகளை பகிரங்கப்படுத்தியதற்கு அமைச்சர் தொண்டமான் மீது தினேஷ் கடும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு இ. தொ. கா. சமர்ப்பித்த யோசனைகளை அமைச்சர் தொண்டமான் பகிரங்கப்படுத்தியது முறையான செயலல்ல என்று தெரிவுக்குழுத் தலைவர் திரு. மங்கள முனசிங்கவுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன இதைப் புகாரைத் தெரிவித்துள்ளார்.

அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தெரிவுக் குழு பரிசீலனை நடத்திக் கொண்டிருக்கையில் யோசனைகளைப் பயன்படுத்திப்பேச்சுவார்த்தைகளை அமைச்சர் தொண்டமான் நடத்துவது முறையான செயலல்ல.

தெரிவுக் குழுவில் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரவை உறுப்பினர் ஒருவரின் இத்தகைய நடத்தைகளினால் தெரிவுக் குழுவுக்கு ஏற்படுகின்ற அசௌகரியத்தை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். தொண்டமானின் நடத்தையினால் தெரிவுக் குழுவின் பணிகளில் மக்களின் நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. தெரிவுக்குழு இறுதியாக அதன் அறிக்கையை வெளியிடும்போது அது மக்கள் வெளிப்படுத்திய கருத்துக்களை நிதானமாகப் பரிசிலனை செய்யப்பட்டபின்னர் தயாரிக்கப்பட்டதென மக்கள் கருதுவது சாத்தியமில்லை.

தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கின்ற ஒரு யோசனையையும் பகிரங்கமாக விவாதிப்பதில்லையென இணக்கப்பாடு காணப்பட்டிருந்தது.

அரசியல் கட்சிகள் மத்தியில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக யோசனைகளைப் பயன்படுத்துவதன் மூலமாக தொண்டமான் விவகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வெளியே கொண்டுவந்துவிட்டார்.

இ. தொ. கா. வின் யோசனைகளை நான் எதிர்க்கவில்லை. அவை தொடர்பான தொண்டமானின் நடத்தையையே கண்டிக்கிறேன். இந்த யோசனைகள் மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சி ஆராய்ந்து வருகிறது என்றார்.

## ராணுவ ரோந்து குறைவு

(மட்டுநகர்)

விடுதலைப் புலிகளின் தொடரான இராணுவச் செயற்பாடுகளினால், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் இராணுவ ரோந்துக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகத் தெரியவருகிறது. [ரி]

## எழுதுவினைஞர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க எழுதுவினைஞர் பரீட்சை அடுத்த மாதம் முற்பகுதியில் வடமாகாணத்தில் நடைபெறுமென்று யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இப்பரீட்சை முடிவடைந்த பின்புதான் கிராமசேவையாளர்களுக்கான பரீட்சை நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வி)

0 0 0

(கொழும்பு)

இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கான வருடாந்தப் பரீட்சைகள், கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களில் நடைபெற உள்ளதாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகள், கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்திலும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## ஒளிவிழா

(ஊர்காவற்றுறை)

குருநகர் பங்கில் புனித யாகப்பர் ஆலயத்தில் திருமணமான இறை இரக்க ஜெப வழிபாட்டுக் குழுவினரின் ஒளிவிழா அண்மையில் ஆலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 'ஏமாந்தான் ஏரோது அரசன்' இசைநாடகம்மேடையேற்றப்பட்டு பங்குத் தந்தை அருட்திரு பி. எம். இம்மனுவேல் அடிகளால் பாராட்டுப் பெற்றது.

## நாய்கள் அழிப்பு

(பூலோலி)

வடமராட்சிப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் இப்பகுதிகளில் கடமையாற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். (61

# பதுளை தமிழர்கள் பெரும் அச்சம்

(கொழும்பு)

பதுளைப் பகுதி தோட்டங்களைச் சேர்ந்த தமிழ் தொழிலாளர்கள் பலர் தங்கள் பிள்ளைகள் கைது செய்யப்படலாம் என அச்சம் தெரிவித்து அங்குள்ள தொழிற்சங்க அலுவலகங்களுக்கு தினமும் படையெடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பதுளை தமுனுகல மலையில் புலிகளின் முகாம் ஒன்றுகண்டு பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட செய்தியைத் தொடர்ந்து அங்குள்ள பெற்றோர்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

தமுனுகல மலைக்கு வருடா வருடம் பௌத்த பிக்குகள் செல்வது வழக்கம் என்றும் பிக்குமாரினால் அமைக்கப்பட்ட குடிசையையே அங்கு பொலிஸார் பார்த்திருக்கலாம் என்று அப்பகுதி தொழிலாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் தெரிவித்தனர்.

## க. பொ. த. உயர்தரம் விசேட பரீட்சை புள்ளிகள் யாழ். வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் நடைபெற்ற க. பொ. த. [உயர் தரம்] விசேட பரீட்சைகளின் புள்ளிகள் யாழ் நகருக்கு வந்து சேர்ந்தன.

இதேவேளையில் கடந்த வருடம், வடமாகாணத்தில்நடைபெறவிருந்த க. பொ. த [உயர் தர] பரீட்சையும் இவ்வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறலாமென்றும் அண்மையில் வடமாகாணத்தில் க. பொ. த (சாதாரணம்) பரீட்சைகள் மிக அமைதியாக நடைபெற்றதைத் தொடர்ந்து இந்தப் பரீட்சையையும் நடத்துவதற்கு பரீட்சைத்திணைக்களம் முயற்சிகள் மேற்கொள்வதாகவும் தெரியவந்துள்ளது. (வி)

# இராசி பலன்

08-01-1992

புதன்கிழமை

(தமிழுக்கு மார்கழி 24)

திதியை மு. ப. 11.11 வரை அவிட்டம் பி. இ. 1.30 வரை; மரணயோகம் இராகு காலம் நண்பகல் 12.32 முதல் 2.02 வரை; சுபநேரம் மாலை 5.02 முதல் 6.32 வரை. சதுர்த்தி விரதம்.

மேடம்: சிநேகிதர் உதவி, ஸ்திரி மூலமான லாபம், சயன சௌக்கியம்.

இடபம்: தனலாபம், இனசன மகிழ்ச்சி, காரிய சித்தி.

மிதுனம்: விரும்பியவை தடைபடல், குடும்ப மனஸ்தாபம், அசதி.

கடகம்: தனநஷ்டம், சத்துரு பீடை, அமைதியின்மை.

சிங்கம்: புத்தித் திறமை, ரோக நீக்கம், குடும்ப மகிழ்ச்சி.

கன்னி: வாக்கு வசீகரம், களத்திர சுகம், பெரியோர் மதிப்பு.

துலாம்: பணியாள் துன்பம், உடல் பலவீனம், பயமுறுத்தல்.

விருச்சிகம்: மனக்கவலை, தொழில் பகை, அதிக பிரயாசம்.

தனுசு: புதிய விதானம், புத்திர சுகம், பணவரவு.

மகரம்: இனசன விரோதம், காரியத்தடை, பயண அலைச்சல்.

(4-ம் பக்கம் பார்க்க)

# 600 தமிழ்க் குடும்பங்கள் உணவின்றி தவிப்பு

(திருமலை)

தம்பலகாமம் அகதிமுகாமிலிருந்து மீளக்குடியமர்த்தல் என்பதன் பேரில் 10 மாதத்தின் முன் படையினரால் கூட்டிச்செல்லப்பட்ட 600 தமிழ் குடும்பங்கள் இருப்பிடம் உணவு வசதியின்றி தவிக்கின்றனர்.

இக்குடும்பங்களின் பரிதாப நிலை தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி பிரதிநிதிகள் குழுவினர் இக்குடும்பங்களை சந்தித்து விபரங்களைப் பெற்றுள்ளனர்.

புதுக்குடியிருப்பு மேற்கு கலனிபட்டுமேடு நாயன்மார்திடல் ஆகிய கிராம மக்களே தம்பலகாமம் அகதிமுகாமில் இருந்து மீளக்குடியமர்த்தப்படுவதற்கென படையினரால் கொண்டு செல்லப்பட்டவர்களாவர்.

இவர்களுக்கு தங்குமிட வசதியோ, தற்காலிக விடுதிகளை அமைப்பதற்கு நிதியுதவியளிக்கப்படவில்லை.

இவர்களில் சுமார் 500 குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் சிறுசிறு கொட்டில்களும் அமைத்து வாழ்கின்றனர். ஒருவேளை உணவுக்கே இவர்கள் அலைக்கழிகின்றனர். மிகுதி 100 குடும்பங்களும், வீதிகளில் அலைந்துதிரிகின்றனர்.

# இந்திய - இலங்கை கூட்டுக்கமிஷன் புதுடில்லியில் கூடியது

(புதுடில்லி)

இந்திய இலங்கை கூட்டுக் கமிஷனின் கூட்டம் புதுடில்லியில் நடைபெற்றது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத்தும் இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கியும்இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தனர்.

வர்த்தகம், முதலீடு, நிதி, கலாசாரம் பற்றிய விடயங்கள் இந்தக் கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இது தவிர கல்வி சுற்றுலா பற்றிய விடயங்களும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இந்திய பிரதமர் பி. நரசிம்மராவை திரு. ஹரோல்ட் ஹேரத் சந்திக்கவுள்ளார். (கே)

## மூன்று மாதங்களில் 256 படையினர் பலி

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று மாதங்களில் விடுதலைப்புலிகள் இராணுவத்தினர் மீது நடத்திய தாக்குதல்களில் 256 படையினர் கொல்லப்பட்டனர். 155 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன, 86 புலிகள் வீரச் சாவு அடைந்தனர்.

கடந்த அக்டோபர், நவம்பர் டிசம்பர் மாதங்களில் இடம் பெற்ற இத்தாக்குதல்களில் ஸ்ரீலங்காபடையினர் பாரிய இழப்புக்களையும் சேதங்களையும் சந்தித்துள்ளனர்.

மணலாறு, வவனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டன.

## ஒன்றிணைக்கும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள அனைத்து அறநெறிப் பாடசாலைகளையும் மாவட்ட ரீதியில் ஒன்றிணைக்கும் திட்டம் ஒன்றை இந்து சமய கலாசாரத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறதென திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (150)

# ★ வடக்கு - கிழக்கை இணைத்தால் முஸ்லிம்களுடன் இணைந்து ஊவா மக்கள் போராடுவர்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் விருப்பத்துக்கு மாறாக வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக இணைக்க முற்பட்டால் கிழக்கு முஸ்லிம்களுடன் ஊவா மக்களும் சேர்ந்து போராடுவர். நானே அப்போராட்டத்திற்கு தலைமை தாங்குவேன்.

ஊவா மாகாண முதலமைச்சர் திரு. பேர்ஸி சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைக்கப்படும் பட்சத்தில் கிழக்கு மாகாணத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மக்கள் விருப்பம் பெறப்படும் எனக் கூறப்பட்டதாலேயே 13வது அரசியலமைப்பு திருத்தத்தை நாம் ஆதரித்தோம் என்றும் அதற்குமாறாக வடக்கு கிழக்கை நிரந்தரமாக இணைக்கப்படுவதை ஆதரிக்க முடியாது என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகள் ஊவா மாகாணத்திலும் ஊடுருவ தொடங்கியுள்ளனர். இது தொடர்பாக பொலிசாருடன் இணைந்து பாதுகாப்பு திட்டம் வகுத்து செயல்படுகிறோம்.

# முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணையும்?

(கொழும்பு)

இலங்கை அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசின் இந்த அழைப்பை ஏற்பதா? இல்லையா என்பது பற்றி முஸ்லிம் காங்கிரஸ் செயற்குழு ஆராய்ந்து வருகிறது.

அரசுடன் இணையும்பட்சத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு அமைச்சரவையில் இடம் கிடைக்கலாம் எனக் கூறப்படுகிறது.

# தம்பலகாமத்திற்கு சிங்கள உதவி அரச அதிபர்

(திருமலை)

தம்பலகாமம் பகுதி தமிழர் பிரதேசமாக இருந்தபோதிலும், சிங்களவர் ஒருவரே அங்கு உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் தமிழ்மக்கள் தங்கள் குறைபாடுகளை எடுத்துக்கூற முடியாமலுள்ளது.

இத்தமிழ்ப் பகுதியில் இரு கிராமசேவகர் வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை.

# திருமலையில் கடந்த வாரம் இருபது தமிழர்கள் கைது

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் கடந்த வாரம் இருபது தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இம்மாவட்டத்தில் இராணுவத்தினரின் தேடுதல் வேட்டையும், தமிழர் மீதான துன்புறுத்தலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த 5-ம் திகதி உப்பூறல் பகுதியில் இடம்பெற்ற தேடுதலில் க. மயில்வாகனம் என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை சம்பூரில் அண்மையில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது செ. விசுவையா (50 வயது), செ. ஸ்ரீபத்மநாதன் (30 வயது) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

## ஈ.ரி.எவ் செலுத்துவோருக்கு இலவச சத்திரசிகிச்சை

(கொழும்பு)

தொழிலாளர் நம்பிக்கை செலுத்துவோர் (ஈ. ரி. எவ்.) இலவசமாக இருதய சத்திர சிகிச்சை செய்யும் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி நிதியை செலுத்தும் உறுப்பினர்கள் எவருக்காவது இருதய நோய் இருந்தால் அவர்கள் இருதய நோய்க்கான சத்திர சிகிச்சையை இலவசமாக செய்ய தொழிலாளர் நம்பிக்கை நிதிச்சபை சத்திர சிகிச்சை திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு சத்திர சிகிச்சைக்கும் ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபா செலவாகும். இத்திட்டம் கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 10 பேர் மேற்படி சத்திர சிகிச்சையை செய்துள்ளனர். (ஸ)

## நெடுந்தீவு பிரதேச செயலர் பணிமனை

(மானிப்பாய்)

நெடுந்தீவு பிரதேச செயலர் பணிமனை நேற்று முன்தினம் 6-ந் திகதி திங்கள் முதல் யாழ். செயலகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகின்றது. (71)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சகல சாரண ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம் இன்று 8-ம் திகதி புதன்கிழமை சமிலானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் மாவட்ட ஆணையாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

**தொண்டாவின்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் யோசனைகளை எதிர்ப்பவர்கள், நிராகரிப்பவர்கள் தமது யோசனைகளை முன்வைக்கவேண்டுமென 'அகில இலங்கை முஸ்லிம் லீக்' தெரிவித்துள்ளது. (சி)

**சமாதான**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் எனக்கு எச்சரிக்கை விடுவதும் எனக்கு விரோதமாக பேசுவதும் விந்தையாக இருக்கிறது. இவற்றைக்கண்டுநான் அஞ்சப் போவதில்லை. எனது சமாதான முயற்சியிலிருந்தும் அதற்கான நடவடிக்கையிலிருந்தும் பின்வாங்கப்போவதில்லை என்றார். (சி)

**இராசி பலன்**
(3-ம் பக்கத்தொடர்ச்சி)

கும்பம்: தொழில் லாபம், வெகுஜன மதிப்பு, வெற்றி வாய்ப்பு.

மீனம்: காரிய ஆக்கம், இடையூறு, குடும்ப வெறுப்பு.

— ஜோஸ்யர்

## ஓய்வூதிய வவுச்சர்கள்

(மானிப்பாய்)

1991ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் நேற்று 7ந் திகதி செயலக ஓய்வூதியப் பிரிவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் அந்தந்த வங்கிகளுடன்தொடர்பு கொண்டு தமது ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளுமாறு ஓய்வூதியப்பிரிவினரால தெரிவிக்கப்பட்டுள்ளது. (71)

## இலங்கை வங்கி பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கிளை 1989-ம் ஆண்டு வடமாகாணத்தில் 1-வது அதிசிறந்த வங்கிக்கிளையாக தெரிவு செய்யப்பட்டதை யொட்டி இன்று பரிசளிப்பும் பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளது.

வங்கி முகாமையாளர் திரு. நா. விவேகானந்தன் தலைமையில் நடைபெறும். இவ்வைபவத்தில் மாவட்டமுகாமையாளர் கே.கணேசமூர்த்தி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

**தீவகத்தில்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவை பிரிக்கப்படும்.

மன்னாரிலும் இதேபோல் விரைவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவும் அரசு முயன்று வருகிறது. (சி)

**வடக்கு**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கும் திட்டவட்டமான கருத்துக்கள் இந்திய-இலங்கை உடன்படிக்கை இன்னமும் செல்லுபடியாகும். அதுதான் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணக்கூடிய சிறந்ததிட்டமென இந்தியா இன்னமும் கருதுவதை இலங்கைஅரசுக்கு எச்சரிப்பதுபோல் உள்ளன.

**ஊர்காவற்றுறை**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் மோதிடார் குண்டுத் தாக்குதலை நடத்தியதாக கூட்டுப்படை தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இரு தரப்பினரிடையேயும் மோதல் இடம்பெற்றதாகவும் எனினும் சேதங்கள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**தொண்டா**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணி' தலைமையில் பெருமளவு பௌத்த சிங்கள ஸ்தாபனங்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளன.

தொண்டமானின் யோசனையால் நாட்டில் பிரச்சினைகள் அதிகரிக்குமெனவும், எனவே இதனை நிராகரிக்குமாறும் இந்த அமைப்புகள் ஜனாதிபதியை கோரியுள்ளன.

**மூன்று தமிழர்**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

அண்மையில் இப்பகுதி இராணுவத்தினர் நடத்திய சுற்றிவளைப்பின்போது கைதான இம்மூவரின் இறுதிச் சடங்குகள் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன் இறந்தவர்களின் சடலங்கள் இராணுவத்தால் ரயர்போட்டு எரிக்கப்பட்டன.

**ஜனநாயக**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுடன் புதுடில்லியில் நேற்று நடாத்திய பேச்சுவார்த்தையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கச்சதீவில் மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் விடயம் தொடர்பாக இலங்கை கடற்படையினர் நடந்துகொள்ளும் விதம்குறித்தும் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

கச்சதீவுக் கடல் எல்லையை தாண்டி மீன்பிடிக்கும் இந்திய மீனவர் மனிதாபிமானத்துடன் நடத்தப்படுவர் என இலங்கை தரப்பில் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சார்க் அமைப்பின் தலைவர்கள் அடிக்கடி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்று இலங்கை சார்பில் தெரிவித்த யோசனையை ஜே. என். டிக்ஸித் ஏற்றுக்கொண்டார். (ம)

# ஐரோப்பியநாடுகள் இலங்கைக்கு எச்சரிக்கை

(லண்டன்)

இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் இனிமேல் மனித உரிமைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டே வழங்கப்படும் என்று ஐரோப்பிய நாடுகள் இலங்கை அரசை எச்சரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் திறைசேரி அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தையிலேயேமேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகள், சர்வதேசநாணயநிதி, உலகவங்கி போன்றவற்றின் உதவியிலேயே இலங்கையின் பொருளாதாரம் தங்கியுள்ளது என்றும் கூறப்படுகிறது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதை தடுக்க போதிய அதிகாரங்கள் இலங்கை அரசிடம் இல்லை என ஐரோப்பிய ராஜதந்திர வட்டாரங்கள் கவலை கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# இனக்கலவரம் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை

## தொண்டா பேட்டி

(கொழும்பு)

இனப் பிரச்சினை தொடர்பாகத் தாம் முன்வைத்துள்ள யோசனையால் இனக் கலவரம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு எதுவும் இல்லையென அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.

இப்பேட்டியின் விபரம் வருமாறு:

கேள்வி: உங்கள் யோசனையால் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் 1983 போல ஒரு பதற்றநிலை தோன்றியுள்ளதா?

பதில்: முன்னர் அரசில் அங்கம் வகித்தவர்களும் சேர்ந்தே கலவரம் விளைவித்தனர். தற்போது அரசில் அப்படியானவர்கள் இல்லை.

கே: நீங்களும் முன்னர் அதே ஆட்சியிலேதானே இருந்தீர்கள்?

பதில்; ஆம். நிலைமைப் பதவி மாறிவிட்டது. யாரும் தமிழர் மீது 1983போல் துன்பம் விளைவிக்க விடமுடியாது.

கேள்வி: விடுதலைப் புலிகள் உங்கள் யோசனைகளை ஏற்றுக்கொள்வார்களா?

பதில்: ஏற்றுக்கொண்டதாக அவர்கள் கூறவில்லை. ஆனால் எனது யோசனைகள் பற்றி ஆராய்வதாகவே அறிவித்துள்ளனர். எனவே காலம் தாழ்த்தி யாழ்ப்பாணம் செல்வது உசிதமானது.

கேள்வி: பௌத்த காங்கிரஸும், சிங்கள இயக்கங்களும் உங்கள் யோசனைகளை எதிர்க்கிறார்கள். ஆகையால் உங்கள் யோசனைகள் சரி வருமா?

பதில்: சமாதானத்துக்கான முயற்சியே எனது யோசனை. சகல தரப்பினராலும் ஏற்க வேண்டுமென்பது உண்மை. அதனாலேதான் தெரிவுக்குழுவுக்கு எனது யோசனையை அனுப்பியுள்ளேன். ஐ. தே. க. கூட சகல தரப்பினராலும் எனது யோசனைகள் ஏற்கப்படவேண்டுமென்று கூறியுள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக் குழு எனது யோசனைகளை ஆலோசிக்கலாம். (கே)

**மன்னார்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் றேமன், பேசாலை) ஆகிய போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

லெப். கேர்ணல் கேணு மன்னாரில் இடம்பெற்ற பல முக்கிய தாக்குதல்களில் பங்கு கொண்டு விடுதலைப் போராட்ட வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் தேடுதல் தீவிரம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக இராணுவத்தினர் தமது தேடுதல் நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.


## முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி. பீடிகளைப்போல் ஒரு சில நபர்கள் தரத்திலும் விலையிலும் குறைந்த போலி ஆர். வி, ஜி. பீடிகளை விற்பனை செய்வதாக அறியவந்துள்ளோம். அசல் ஆர். வி. ஜி. பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

குறைந்த விலையில் போலி ஆர். வி. ஜி. பீடிகளை விற்பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

இதமான, சுவையான புகை இன்பத்திற்கு அசல் ஆர். வி. ஜி. பீடிகளை கேட்டு வாங்கிப் பாவியுங்கள்.

ஆர். வி. ஜி. நிர்வாகம்.
58, குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-5814)


## மரண அறிவித்தல்

### திரு. நவரத்தினம் சிவஞானம்
(இளைப்பாறிய உணவுக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்)

இளைப்பாறிய உணவுக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு. நவரத்தினம் சிவஞானம் நேற்றுக் காலமானார். அன்னார் மானிப்பாய் கல்லூரி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற நா. நவரத்தினம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற ந. சிவசுப்பிரமணியம், ந. பாலசுந்தரம், ந. சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி கதிரமணியின் அன்புக் கணவரும், சி. சுபாஸ்கர் (ஜேர்மனி), திருமதி செ. சுபாஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மா. செந்தில்வாசன், சு. மேகலா ஆகியோரின் மாமனாரும், செ. சரசானந்தராசா தம்பதிகளின் மருமகனும், செ. அபிராமியின் அன்புப் பேரனுமாவார். இறுதிச் சடங்குகள் இன்று (8-1-1992) புதன்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி க. சிவஞானம்.
'ரத்தின வாசா',
கல்லூரி வீதி, மானிப்பாய். (சி 5838)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.